

# அமைதிப் பூக்கள்

மூதூர் எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப் பூக்கள்

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

வெளியீடு

ஜெஸ்கொம் பிரிண்டர்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | அமைதிப்பூக்கள் |
| விடயம் | – | கவிதை |
| ஆசிரியர் | – | மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் |
| அட்டைப்படம் | – | ச. நிரோஷினி |
| வெளியீடு | – | ஜெஸ்கொம் பிரின்டர்ஸ்<br>230 உட்துறைமுக வீதி<br>திருகோணமலை. |
| உரிமை | – | ஜெஸ்கொம் பிரின்டர்ஸ் |
| முதற்பதிப்பு | – | ஏப்பிரல் 2013 |
| பிரதிகள் | – | 500 |
| விலை | – | 240/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் உள்ளே ............


| | |
|---|---|
| அமைதிப் பூக்கள் | 8 |
| ஓ மனுக்குலமே | 10 |
| ஒடிக்கப்பட்ட மனுதர்மத்தின் கரங்கள் | 13 |
| உதிர்ந்து கிடக்கும் அமைதிப்பூக்கள் | 15 |
| என் பயணம் | 16 |
| புதிய விடியல் | 17 |
| கண்ணீர் அறுவடை | 18 |
| பொறுமைப் பொக்கிஷம் | 19 |
| கவி மேகங்களே! | 20 |
| வேதனைச் சுமை | 21 |
| என் நேச நண்பனே! | 23 |
| என் தோழமையை அலங்கரிப்பவனே! | 25 |
| யுத்தப் புயல்கள் ஓயுமா? | 26 |
| கொடுமையின் கருக்கள் கலையாதா? | 27 |
| கபட நாடகம் | 28 |
| ஆண்டவனின் அருட்கொடை | 29 |
| சோகத்தின் சொர்க்க பதி | 31 |
| இலட்சியத் தலைமை | 33 |
| புகழின் போர்வைக்குள் | 34 |
| அதிகாரப் போதை | 35 |
| சந்தர்ப்ப வாதத்தின் சான்றுகள் | 36 |
| வார்த்தை மாந்திரீகம் | 37 |
| மாய வார்த்தை வலை | 38 |
| விடுதலை வேட்கைத் தீ | 40 |
| அரசியல் வாணிபம் | 41 |
| அடிமை விலங்கு | 42 |
| வருந்திக் கொண்டிருக்கின்றேன் | 43 |
| அவலத்தின் அடையாளச் சின்னம் | 44 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உரித்தற்ற உயர்ச்சிகள் | 45 |
| அவலத்தின் அறுவடை | 46 |
| அப்பாவி மக்கள் | 47 |
| சமூகம் கண்ட கனவுகள் | 48 |
| அராஜகத்தின் வாரிசுகள் | 49 |
| சமூகத்தின் தீராத புற்றுநோய் | 50 |
| அரசியல் அரங்கில் | 51 |
| என் பயணம் | 52 |
| ஒழுக்கம் | 53 |
| ஜீவ காருண்யம் | 54 |
| காலத்தின் நியதியா? | 55 |
| பரிதாபத்தின் பாசறை | 56 |
| நூல்கள் | 57 |
| விடுதலையின் விலாசம் | 58 |
| தீர்வுத் திட்டங்கள் | 59 |
| உள்ளத் தடாகம் | 60 |
| சரித்திரம் | 61 |
| இப்போது இங்கு | 62 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இந்நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென அயராது உழைத்துவரும் முஸ்லிம் மீடியா போரம், முஸ்லிம் கவுன்சில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் ஆகியவற்றின் தலைவரான என் நேசத்திற்குரிய அல்.ஹாஜ்.என்.எம்.அமீன் அவர்களுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசக நோக்கு

கவிஞர் எம்.எம்.ஏ.அனஸ் அவர்களின் "அமைதிப் பூக்களை" ஒரே இருப்பில் வாசித்து சுவைத்த போது மனதில் பழைய நினைவுகள் முகிழ்ந்தன.

எனது பதினைந்தாவது வயதில் சாதாரண தரம் படித்துக்கொண்டிருந்த போது வாசித்த ஒரு கவிதை மீளவும் ஞாபகம் வந்தது.முஸ்லிம் முரசு மாதாந்த சஞ்சிகையில் வந்தது.கவிஞர் பெயர் ஞாபகத்தில் இல்லை.

கண்ணாடி முன் நின்று
கனிவாயில் விரல் மேவ
பொன்னான இமை நோக
பார்த்தது போதுமடா
மின்னான உன் அழகை
முழுவதுமே காட்டி விட
கண்ணாடி யாலமோ
கற்கண்டே தொழவாடா

ஏறத்தாழ 45 ஆண்டுகளாக எனது நினைவை வருடிக் கொண்டிருக் கின்ற கவிதை அது.எட்டு வரிக்குள் காட்சி வெளிப்பாட்டையும் , கருத்து வெளிப்பாட்டையும் கலையுணர்வோடு வெளிப்படுத்தி நிற்கும் அதே வேளை, மிக எளிமையான சொற்களால் அது ஆக்கப்பட்டுள்ளது.கவிதையை வாசிக்கும்போது காட்சி மனதில் விழிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன், அவன் தாய்,தாயின் அரவணைப்பு மிகுந்த கட்டளை, அழகுமிகு சிறுவனின் வெகுளித்தனம் அனைத்தும் வெகு உணர்வு பூர்வமாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. கனிவாயில் விரல் மேவ எனும் சொற்களில் எத்தனை விதமான கருத்துக்காட்சி வெளிப்பாடு. மீண்டும் ஒருமுறை வாசிக்கத் தூண்டும் வரிகள். சிறுவனின் முகமும் அழகும் உங்கள் கண்களில் பிரத்யட்சமாக காட்சி தருவதை உணர்கிறீர்களா?

கவிதை என்பது தேர்ந்தெடுத்த சில சொற்களின் குறுகிய உருவத்தில் ஏதோ ஒரு மனோதர்மத்தில் மானிட உணர்வில் வெளிப்படும் இலக்கியம். செய்யுள், வெண்பா, மரபுரு, புதுக்கவிதை, வசனக் கவிதை, ஹைக்கூ, குறும்பா என்றெல்லாம் காலத்தால் அவை புது உருவங்கள் பெற்றுவருகின்றன. நவீன உலகில் வேகமாகவும்- குறுகியதாகவும் கருத்தியலை வெளியிட கவிதை நல்ல சாதனமாகும்.

ஆனாலும் இவற்றில் எத்தனை கவிதைகள் மக்கள் மனதில் நிற்கின்றன?....... எழுபதுகளில் மு.மேத்தா என்றொரு கவிஞர் தமிழகத்தில் வீச்சுமிக்க கவிஞராக இனங்காணப்பட்டார். நா. பார்த்தசாரதியின் 'தீபம்' இலக்கிய சஞ்சிகையில் இவர் ஒரு புதுக்கவிதை எழுதினார். 'தேசபிதாவுக்கு தெருப்பாடகனின் அஞ்சலி' என்ற தலைப்பு. இந்தக்கவிதை ஒன்றின் மூலமே அவர் மிகப் பிரபலமான கவிஞராகத் தலை நிமிர்ந்தார். தமிழில் தோன்றிய புதுக்கவிதைக்காரர்களை வரிசைப்படுத்தினால் முதல் பத்து கவிஞர்களுள் ஒருவராக இருப்பார். இவரின் 'கண்ணீர்ப் பூக்கள்' கவிதை தொகுதி தமிழ் இலக்கியச் கலைஞர்கள் அனைவர் நெஞ்சங்களையும் வருடிச்சென்றது.

இப்போது கவிதைத் தொகுதியை எழுதி இருக்கின்ற ஜனாப் எம்.எம்.ஏ. அனஸ் ஓர் இலக்கியப் பாரம்பரியத்தில் வந்தவர். சீறாப்புராணத்தின் பல படலங்களுக்கு தெளிவுரை எழுதிய மூதூர் உமறு நெயினார்ப் புலவரின் மகள் வழிப்புத்திரர் அவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பார்வையும் சொற்களை இலாவகமாகக் கையாளும் திறனும் இவரிடம் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

நூலின் தலைப்பு 'அமைதிப் பூக்கள்' ஆகும். தலைப்பே இங்குள்ள கவிதைகளின் நோக்கத்தைச் சொல்லிவிடும். ஆனாலும் பல்வேறு கோணங்களில் அவற்றைத் தரிசித்துவாசகனைத் தன்பால் இழுத்துக் கொள்கிற வசியத்தையும் கவிதைகளில் காணலாம்.

ஜனாப் எம்.எம்.ஏ. அனஸுக்குக் கவிதா உணர்வு அவரது பாரம்பரியம். கண்ணியமும் சமூகப் பற்றும் தந்தைவழி வந்தது. இத்தனைக்கும் மேலாக அரசியலில் நன்னோக்குள்ள முனைப்பு. இத்தனை குணாதிசயங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் கருத்தியல் வாதத்தை இந்தக் கவிதைகளில் தரிசிக்கக் கிடைத்தது. 'கண்ணீர்ப் பூக்கள்' மாதிரி இந்தத் தொகுதியிலுள்ள ஆக்கங்களும் சுவைஞர்களின் நெஞ்சைத்தொட்டு நிற்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. கவிஞரின் நன்னோக்குக் கருத்துக்கள் இங்கு யுத்த ஆபத்துக்களை வேதளையோடு நோக்குகின்றது. எனக்குப் பிடித்த அந்த நாலு வரிகள் உங்கள்மனதையும் ஆறுதலோடு வருடிச் செல்லும் என நினைக்கிறேன்.

நாளைய பொழுதுகளாவது
நல்லமைதிச் சூழலில்
நம் நாட்டில்
புலராதோ?....

பொழுது என அவர் ஒரு வரியில் குறிப்பிடவில்லை. பொழுதுகள் என பன்மையில் குறிப்பிட்டிருக்கிறார். அமைதிச் சூழல் ஓர் இரவோடு முகிழ்த்து விடாது. அதற்காக பல பொழுதுகள், பல இரவுகள் பொறுமையோடு-நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும், எனும் யதார்த்தத்தையும் இங்கு அவர் வாசகனுக்கு விட்டு வைத்திருக்கிறார். இவ்வாறான பல வரிகள் என்னைக் கவர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை உங்களையும் கவரும் என்றே நினைக்கிறேன். எனது நெஞ்சைத் தொட்ட மற்றுமொரு கவிதை வரிகள்.....

பொன்னும் மணியும்
விளைந்த
கிழக்கு மண்ணில்
மானிட உயிர்கள்
அறுவடையாவதோ?.....

யுத்தம் தந்த வேதனையால் தான் அனுபவித்த மன உளைச்சல்களை மிகச் சொற்பமான வரிகளில் செதுக்கித்தந்திருக்கின்ற அழகு ஒரு கைதேர்ந்த கவிஞனின் வெளிப்பாடாகவே படுகின்றது. கிழக்கு மண்ணின் வளமும் செழுமையும் இங்கு பொழிவிழந்து நிற்கும் காட்சி நம் கண்முன் விரிகிறது......

இந்தக் கவிதைத்தொகுப்பு அவரது கன்னிப் படைப்பு. முதல் தொகுதியிலேயே நம்பிக்கை தந்திருக்கிறார். தொடர்ந்தும் அவர் நல்ல படைப்புக்களைத் தரவேண்டும் என விரும்புகிறேன். நிறைய வாசிப்பதன் மூலம் நல்ல இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பது என் திடமான நம்பிக்கையாகும்.

மூதூரின் இலக்கிய வளத்தை வெளிப்படுத்த மேலும் ஓர் ஆக்க இலக்கியக்காரர் முனைப்புக் காட்டி நிற்கிறார் என்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

ஏம்.எஸ்.அமானுல்லா

தலைவர்

மூதூர் இலக்கிய வட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வன்செயல்களின் தளமாய் மாறி நாளாந்தம் மனித உயிர்கள் வீணிலே மரித்து வருகின்ற எம்நாட்டினில் சமாதானம் தழைத்தோங்க வேண்டும் எனத்தினமும் என் உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வுகளும்,

"நியாயமான முறையில் தொடுக்கப்பட்ட போரை விட எந்தவிதத்திலும் நியாயமே இல்லாத சமாதானமாக இருந்தாலும் அதை நான் விரும்புகிறேன்" எனக் கூறிய அறிஞர் 'சிசரோ'வின் ஆழ்ந்த கருத்துரையும்.

உலகையே அழிவின் விளிம்பிற்குக் கொண்டுசென்ற அணு ஆற்றலைக் கண்டுபிடித்த உலகப் பெரும் விஞ்ஞானி 'ஐஸ்டினை' நிருபர்கள் பேட்டி கண்ட போது "உலகத்தையே அழிக்க்கூடிய அணுகுண்டைக் கண்டுபிடித்து விட்டீர்கள். இதிலிருந்து மக்களைக் காப்பற்ற ஏதேனும் வழியுண்டா?" எனக் கேட்ட போது "ஆம் இருக்கிறது. அது தான் சமாதானம்" என்று கூறிய வரலாற்று நிகழ்வும் என் இதயப் பரப்பில் சமாதானத்திற்கான விதையைத் தூவிக்கொண்டிருந்தன. அதன் அறுவடையாகத்தான் 'அமைதிப் பூக்கள்' எனும் இந்நூல் என்னால் எழுதப்பட்டது.

அத்துடன் ஓர் எழுத்தாளன் உண்மை, நேர்மை, கருனை என்பவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு மனித நோயப்பணியைத் தொடர வேண்டும் என்ற இலக்கியப்படைப்பியல் கோட்பாட்டுக் கமையவும் இதனை எழுதியுள்ளேன். மேலும் உன்னதமான அந்த சமாதானத்தால் எனது ஊரும் நாடும் அலங்கரிக்கப்படவேண்டும் என்ற உயரிய அவாவோடு இந்நூலை வெளியிடுவதில் உளநிறைவடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை வெளியிடுவதில் எனக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன். குறிப்பாக இந்நூலை வெளியிட்ட ஜெஸ்கொம் பிரின்டஸ் நிறுவனத்தார்க்கும் நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

எம்.எம்.ஏ. அனஸ்

பெரிய பாலம்

மூதூர் -05

0776288299





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதிப் பூக்கள்

உலகெங்குமுள்ள
உன்னத மக்கள்
உவக்கும்
உயரிய பூக்கள் இவை.

கோடான கோடி உள்ளங்கள்
இவற்றை நுகர்வதற்கான
வழியைத் தேடி
வருந்திக் கொண்டிருக்கின்றன.

வேண்டிய வேளையெல்லாம்
இலகுவில் எல்லோரும்
பெற்றுவிடக் கூடிய
பூவல்ல இவை.

இவற்றைப் பெறுவதற்கு
மனப்பக்குவம் விட்டுக் கொடுப்பு
பொறுமை போன்ற வெகுமதிகளை
வழங்க வேண்டும்.

அமைதிக் பூக்களின்
அவதாரத்தை
மக்கள் வெண்புறாக்களின்
உருவில் பார்ப்பதுவுமுண்டு.

நல்லுள்ளம் எனும்
பொய்கையிலத் தான்
இவை
அதிகம் பூக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூக்களின் மலர்வுகள்
மானுடங்களை மலரச் செய்கின்றன.

எங்கெல்லாம்
மனிதம் வேதனைப்படுகிறதோ
அங்கெல்லாம்
இம்மலரின்
வாசனையை நுகரும்
வாஞ்சையும் அதிகரிக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ மனுக்குலமே!

ஓ மனுக்குலமே!
உன் உயர்வு பற்றி
உரக்க ஒலிக்கப்படுகின்றன
ஆனால்... நீயோ!....
அவலத்தின் அரவணைப்பில்
அங்களாய்த்துக் கொண்டிருக்கிறாய்.

மனிதாபிமானம்
மனித உரிமைகள் எனப்
பேசப்படுகின்ற இவ்வேளையில்
உன் உயிர்காக்க
நீ உருகிக் கொண்டிருக்கிறாய்....

உன் உயிர்கள்
மதிப்பிழந்து போயுள்ள
இவ்வேளையில்....
உன் நிலையெண்ணி
ஏங்குகிறேன்.

மன வேதனைகள்
மேலும் எழுதுவதை எனக்கு
முடியாததாக்கிக் கொண்டிருக்கிறது.

அதோ....
ஒதுங்கி இருக்கின்ற பெரியோர்கள்
உன் மேன்மைக்காய் உழைத்த
மகத்தான மனிதர்கள் அல்லவா?
அவர்கள்
புன்னகைப் பூக்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிவதற்குப் பதிலாக
இன்று...கவலையைக் கண்ணீராய்ச் சொரிந்து
கொண்டிருக்கின்றனரே!

நேர்மையின் சாம்ராஜ்யமான
உன்னை....
அநியாயம் அரசோச்சுவது
எப்படி?
இந்த இழிநிலைக்கு
உன்னை
இட்டுச்சென்றவர்கள் யார்?

சமூகக் காரிருள்
சத்திய சீலர்ளை மறைத்ததனால்
தலைமை நதிகளில்
நாக்கிலிப் புழுக்கள்படம்
எடுத்தாடுவது தான் காரணமா?

செத்தும் கொடை கொடுத்த
சீதக்காதியின் பரம்பரையில் வந்தவர்கள்
இன்று....
உன் அங்கங்களை விற்பதற்க்குவிலை
பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

மனுக்குலமே!நீ...... உயராவிட்டாலும்
உன் தலைவர்கள்
உயர்ந்துகொண்டிருக்கிறார்கள்
உன் மனுதர்மங்கள் எல்லாம்
தர்மமாகி விட்டன
நல்லவர்களும்
விலை போய்விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்உன் வாழ்வு
இன்றுஅதர்மத்தால்
ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒடிக்கப்பட்ட மனுதர்மத்தின் கரங்கள்

இன்று
நாட்டு நந்தவனத்தில்
புரிந்துணர்வுப் பூக்கள்
துவேசச்சுடர்களால்
சுட்டெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மனுதர்மத்தின் கரங்கள்
ஒடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால்
தினமும்
மரண ஓலங்களே....
எங்கள் காதுகள் வாங்கும்
கதைகளாய் உள்ளன.

மரணச் சடங்குகள்
இங்கு...... மலிந்துவிட்டதால்
அதில் கலந்து கொள்வதுகூட
அவசியமற்றதாகிவிட்டது.

இங்கே....
பாலகப் பட்சிகளின்
நேசக் கனிகளாய்த்
துலங்குவது கூடத்
துப்பாக்கிகள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்தைச் சுமந்து சுமந்து
எங்கள் உள்ளங்கள்
உறுதியாகிப் போய் உள்ளமையால்
இனி..... எந்த வேதனைகளாலும்
எம்மை வேதனைப்
படுத்தமுடியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்து கிடக்கும் அமைதிப்பூக்கள்

யுத்தப் புயல்களால்
எம் வாழ்வுத் தோப்பின்
அமைதிப்பூக்கலெல்லாம்
அப்படியே......
உதிர்ந்துபோய்க்கிடக்கிறது.

உதிர்ந்து கிடக்கும்
இம் மலர்கள்
மனுதர்மத்திடம்
தம் புது வசந்தத்திற்க்காக
மன்றாடிக்கொண்டிருக்கின்றது.

அதிகமானோர்
சமூக நந்தவனத்தையே நாசமாக்க
முயன்றுகொண்டிருப்பதால்
அங்கே......அமைதிப்பூக்களின் புஷ்பிப்பை
எம்மால் எதிர்பார்க்கவே முடியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பயணம்

இப்போது.....
சமாதானம் பற்றிக் கதைப்பதற்கு
எனக்குத் தயக்கமாய் இருக்கிறது.

சமாதானம் பற்றி கதைக்கும்போது
சண்டையிடச் சக்தியற்றவன் என்று
எல்லோராலும்...எள்ளிநகையாடப்படுகிறேன்.

அமைதி பற்றிக் கதைக்கும் போது
ஆண்மையற்றவன் என
அசிங்கமாக....
நோக்கப்படுகிறேன்.

இனங்களுக்கிடையிலான
புரிந்துணர்வு பற்றிப்
பேசும் போது....
என்னைப் புரிந்துகொள்ளாதவர்களால்
அவமானத்திற்குள்ளாக்கப்படுகிறேன்.

என் பெருந்தன்மை எல்லாம்
கோழைத்தனம் எனக்
கதைக்கப்படுகின்றது

இறைவனே!
உன் உயரிய படைப்பான
மானுடங்களைக்
கொன்று குவிப்பது தான் .....
வீரம் என்று விளம்பப்படும்
இவ்வுலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்...மானுடங்களை நேசிப்பதால்
என் பயணத்தின்
ஒவ்வொர் அடியும்
சமாதானப் பாதையில் பதியட்டும்.

## புதிய விடியல்

இனி..... வார்த்தைகளை
வாயில் இருந்து வரவிடாமல்
மூளையிலிருந்து......
முளைக்கச் செய்வோம்

பழைய பல்லவியைப் பாடாமல்
புதிய விடியலுக்காய்ப்
பூபாளம் இசைப்போம்.

நல்லோர் கரங்களில்
தலைமைகள் தரப்படாவிடில்
தலைமையையும்
தடைசெய்வோம்.

சமூகத்தின் உயர்ச்சிக்காய்
உருவாக்கிய எம் தலைமைகள்
தம் உயர்ச்சியாய்
உருமாறிப் போனால்
அத்தலைமையையும்
தகர்த்தெறிவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அறுவடை

அமைதிப்பூக்கள்
பூத்துக் குழுங்கிய
எங்கள்........
புண்ணிய பூமியில்
இன வெறியர்கள் தூவிய
துவேச விதைகள்
கலவரமாய்ச் செழித்துக்
கண்ணீராய் அறுவடையாகிக்
கொண்டிருக்கின்றது.

சமாதானத் தென்றல்கள்
எம்மைத் தழுவாமல்
துப்பாக்கிஅரண்களால்
தடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இங்கேவெண்புறாத் தலைமைகள்
இடையிடையே தாங்கிவரும்
சமாதானப் பொதிகள்
தீர்வுத்தடாகத்தில்
போடப்படும் போது

அவையும்
இனவாதப் பருந்துகளால்
அள்ளிச் செல்லப்படுகின்றன

இதனால்
சமாதானம் வருமென
எம் நம்பிக்கை வானில்த் துலங்கிய
சிறு ஒளிக்கீற்றும் இப்போது.....
இல்லாமலாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைப் பொக்கிஷம்

இவை உலகினில்
உயரிய உள்ளங்களில் மட்டும்
ஊற்றெடுக்கும்
உன்னத பொக்கிஷம்.

மானுடத்தை
மகத்துவமாக்கும்
மாபெரும் மாணிக்கம்.

பக்குவப்பட்ட
உள்ளத்திற்கான
உயரிய சான்று

இது
வெற்றியின்
அடையாளச் சின்னம்.

சந்தோஷ சாம்ராஜ்யத்தின்
திறவுகோல்
இதனிடந் தான் இருக்கிறது.

எத்தகைய இன்னல்களையும்
இன் முகத்துடன்
ஏற்றுக் கொள்ளும் சக்தி
இதற்குத் தான்
உடைமையாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பொறுமை அணை
உடையும் போதுதான்
உலகில்
யுத்தப் பிரளயம்
பெருக்கெடுக்கின்றன.

## கவி மேகங்களே!

புவியின் பூரிப்புக்கு
வார்த்தை மழை பொழியும்
கவி மேகங்களே!
கவி மேகங்களே!

எங்கள்
சமூகக் களனியில்
செழுமையுற்றிக்கும்
கொடுமைக் களைகளைக்
கொண்றொழிக்கும்
பிரளயமாய்
உங்கள்
கவிதைகள்
கருக்கொள்ளட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனைச் சுமை

உலகின்
ஆதி மனிதர் ஆதாம்
பாதம் பதித்த
புனித பூமி இது.

பச்சைக் கம்பளப்
பயிராடை போர்த்திய
பசுமை நாடு இது.

பனிமலைகள் நிறைந்து
வற்றாத வள நதிகளின்
அரவணைப்பில்
அழகுற்ற தேசமிது.

ஜீவ காருண்யம் போதித்த
புத்த பெருமான்
பூசித்த தேசமிது.

ஆனால்
இன்று.... இத்தேசம்
வேதனைச் சுமையாய்
எம் இதயத்தில்
இருந்து கொண்டிருக்கின்றது.

உலகில்
நேற்றுவரை இலங்கை
உல்லாசப்பயணத்தின்
தளம் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்படுகொலைகளின்
களம்.

போக்குவரத்துக்காய்
நாட்டில்
வெள்ளையர்கள் திறந்த வீதிகள்
இன்று....இலங்கையர்களால்
மூடப்படுவதோ!

யாழ்ப்பனைகள்
பழம் சொரிவதை விடுத்து
வெடிக்குண்டுகளைச் சொரிவதோ!

வன்னிச் செடிகள்
வளமிழந்து
வாழ்விழந்து போவதோ!

இன உறவுப் பூக்கள்
பூத்துக் குழுங்கிய
மூதூர் மண்ணில்இன்று......வேற்றுமைகள்
வேரூன்றித் தழைப்பதோ!

பொன்னும் மணியும்
விளைந்த கிழக்கு மண்ணில்
மானிட உயிர்கள்
அறுவடையாவதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நேச நண்பனே!

பெற்றெடுத்த தாயை விடப்
பெரிதாகச்
சமூகத்தை நேசிக்கும்
என் நேச நண்பனே!

குரைப்பதற்கு
நாய்களும் அஞ்சுகின்ற
மயான அமைதி ஆட்கொண்டிருக்கும்
இந்த இரவுப் பொழுதிலே....
உனக்கு நேரக் கூடிய
ஆபத்துப் பற்றிய என் அச்சமே....
இந்த எழுத்து வரிகள்

இங்கு நான்
விழித்திருந்து எழுதுவதனால்......
தியாகமாவது....
என் நித்திரை தான்
ஆனால்.... அங்கு
தியாகமாகிக்கொன்டிருப்பது
உன் வாழ்க்கையல்லவா!

நண்பனே!
நாங்கள்
சந்தோஷத்தில் சஞ்சரித்து
வெகு காலங்களாகிவிட்டது.

எங்கள்
வசந்த நதி
இப்போது வறண்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் நானும்
கடற்கரை மணற்பரப்பில்
பசுமை நிறை வயற்பரப்பில்
உலாவந்த பாதைகள்
இன்று......வெடிகுண்டுகளின்
விளைநிலமாகிவிட்டது.

இப்போது.....
இறப்பு இங்கே
கவலைக்குரிய காரியமல்ல
பதிவுகளில் மட்டுமே
பேணப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தோழமையை அலங்கரிப்பவனே!

என் தோழமையை அலங்கரிப்பவனே!
இவற்றைப் பொழுதில்
என் நினைவுகள் உனக்கு வருகிறதா?

உன் நினைவெல்லாம்
சமூகம் என்றிருக்கையில்
என் நினைவுக்குஏது இடம்.

ஆனால்.........
என் நெஞ்சம் நிறைந்திருப்பது
உன் நினைவில்த்தான்.

இப்போது.... நான்
உன்னைச் சந்தித்து
உன் புனிதப்பணியில்
தாமதங்களையோ
தடங்களையோ
ஏற்படுத்த விரும்பவில்லை.

ஆனால்
உன் தோழன் என்ற
பெருமையிலேயே
பெருமையுறுகின்றேன்.

உன் பயணப் பாதையில்
வெற்றி தேவதைகளின்
ஆசீர்வாதங்கள் ஒலிக்க
என் பிரார்த்தனைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தப் புயல்கள் ஓயுமா?

போர் இருளால் போர்த்தப்பட்டிருக்கும்
எம் மண்ணை
மீண்டும்
சமாதான உதயம் உவக்குமா?

நாட்டு நந்தவனத்தில்
மனித மலர்களை
உதிரச் செய்யும்
யுத்தப் புயல்கள் ஓயுமா?

துப்பாக்கி வானின்
குண்டு மழையில்
நாம் நனையாதிருக்க
சமாதானம்
இங்கு குடை பிடிக்குமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமையின் கருக்கள் கலையாதா?

அன்று
நதிக்கரையோரக் குடியேற்றக் காலத்தில்
எம் முன்னோர்கள்
கானக விலங்குகளுடன் போராடினார்கள்
மானுடங்களைக் காக்க

இன்று......
நாங்களோ...... வாழ்வற்காக
மானுடங்களுடன்
போராடிக்கொண்டிருக்கின்றோம்.

இன்று..... சந்தைகளில்
வெடிக் குண்டுகளின்
கேள்வியும் நிரம்பலும் தான்
நிறைவாக உள்ளது.

ஜீவகாருண்யம்
மனித தத்துவம் பற்றிய
மதங்களின் போதனைகள்
வெடியோசைகளினால்
ஆக்கிரமிக்கப்ட்டுவிட்டன.

நாம் துணிந்துவிட்டால்
கொடுமையின் கருக்கள்
நம் காலடியில்
கலைந்து போகாதோ!

நாளைய பொழுதுகளாவது
நல்லமைதிச் சூழலில்
நம் நாட்டில் புலராதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபட நாடகம்

உன் உள ஆழியில்
அமிழ்ந்திருக்கும் துரோகங்கள்
துலங்கிவிட்டன
நீ ஏன்
நண்பனாக நடிக்கிறாய்!

கொடுமைகளைக் கொன்றொழிக்கும்
கொள்கை வாளை
ஏந்தியிருக்கும் எனக்கு
நீ...........
நயவஞ்சகமாய் நடப்பது
நன்றாய்ப் புரிகிறது.

துரோகத்தால்
சோடனை செய்யப்பட்டிருக்கும்
உன் உருவை காணும் போதெல்லாம்
என்னுள்.......
ஆத்திர உணர்வுஅதிகரித்து வருகிறது.

வஞ்சனையை
வழமையாக்கிக் கொண்ட நீ
வாய் வார்த்தைகளால்
அவற்றை மூடி மறைக்கும்
அபார ஆற்றலும் கொண்டிருக்கின்றாய்
என்றாலும்.......
உன் கபட நாடகம்
விரைவில் சமூக மேடையில்
அரங்கேறிவிடும் அறிந்துகொள்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனின் அருட்கொடை

உலகெங்குமுள்ள
சமூகங்கள் எல்லாம்
தகுந்த தலைமைக்காகத்தான்
ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

தம் இலட்சியத்தின்
இலக்கை அடைவதற்க்குத்தானே
இவ்வாறு... ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

நல்ல தலைமையின் சுகந்தத்தை
நுகரத்தானே!.....
இத்தனை பிரயத்தனங்கள்.

தலைமைத்துவம்
எல்லோரும் பெற்றுவிடக்கூடிய
ஏராளப் பொருளா?
இல்லை....

இது
ஆண்டவனின்
அருட்கொடை

சமூகத்தின்
உயிர் நாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கப்பட்ட
சமூகத்தின்
விடுதலைக் கீதம்...

கொடுமைகளின்
கொடும் விலங்கு.

எந்த ஓர் சமூகத்தையும்
ஏற்றத்தின் சாகரத்தில்
சங்கமிக்கச் செய்யும் சக்தி
இதனிடம்தான் இருக்கின்றது.

ஓர் சமூகத்தின்
அவலத்தின் அடையாளம்
தகுந்த தலைமை இல்லாமை.

சமூகத்தின்
அபிவிருத்தியின் அளவு
அதன்......தலைமையின் திறமைக்கேற்ப
கூடும்... குறையும்.

நல்ல தலைமையால்
அலங்கரிக்கப்படும் சமூகம்
என்றும்...
செழுமையால் வாழ்த்துரைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகத்தின் சொர்க்க பதி

உலகமே உயர்ச்சியடைந்து கொண்டு
செல்கிறது
என் இனமே!...நீ
சீரழிவால் சிங்காரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றாய்.

எழுச்சியின் ஏற்றத்தில்
எல்லோரும்
இருந்து கொண்டிருக்கும் போது
நீ மட்டும் ஏன்?
அவலத்தின் இருப்பிடமாய் இருக்கின்றாய்!

உன் உயர்ச்சிக்காக
நீ.... உருகி அழுவதும்
என் இதயத்தை
தைத்துக் கொண்டிருக்கிறது.

என் இனமே!
சோகத்தின் சொர்க்கபதியான
உன்னைக் காணும் போது
என் கவலை உனக்காய்க் கண்ணீர் வடிக்கின்றது.

என் இனமே!
நீயோ!
வீரத்தியாகிகளான
எம் முன்னோர்கள்
தந்து சென்ற "முதுசம்" அல்லவா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ச்சியின் சிகரத்தில் அல்லவா!
அவர்கள் உன்னை

விட்டு விட்டுச் சென்றார்கள்.
விடுதலை முரசைத் தானே
அவர்கள் உன் கரங்களில்
தந்து சென்றார்கள்.
அது..... இப்போது....
அடிமை விலங்காய்
ஆகியதன் மர்மம் என்ன?

உன் நந்தவனத்திற்கு
நல்வேலியாய் இருக்கககவேண்டிய
தலைமைகள்......
காட்டெருமைகளாய்
மாறியது தான் காரணமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியத் தலைமை

சமூகத்தை அலங்கரிக்கும்
இலட்சியத் தலைமைகள்
இவர்களே!.... என
இதயத்தால் நம்பினேன்.

அவர்கள் பின்னே
அடி எடுத்து வைத்த போது
அவர்களும்........
பதவிப் போதையில்
சுயநலக் கால்களால் உதைத்து
என்னை இடறி விழச் செய்த
பின்பு தான்

இலட்சியத் தலைமை என்பது
எனக்குப் புரியாத ஒன்றாக
இருந்து கொண்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழின் போர்வைக்குள்

மறைந்து போன
அந்த மா மனிதர் அஷ்ரஃ.பின்
இலட்சிய அரசியலையும்
தனித்துவப் போக்கையும்
தகுந்த சேவைகளையும்
இன்று....நீங்கள்
எங்களிடம் திரும்பத்...... திரும்ப
எடுத்துக் கூறுவதன்
மர்மம் என்ன?

இன்றைய தலைமைகளான
உங்களின்......
இயலாமையையும்
முடியாமையையும்
அந்தத் தலைவன் அஷ்ரஃ.பின்
அபார ஆற்றலுக்குள்முடி மறைக்கவா?

அந்தத் தானைத் தலைவனின்
புகழின் போர்வைக்குள்
இன்னும்.....
எத்தனை காலம்ந்தான்
உங்கள் இயலாமையை
மறைக்கப் போகிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் போதை

இன்று.....
அதிகாரத்தில் உயர்ந்து விட்ட நீ
உன் உறவுக்கு
உயர்ந்தவர்களை மட்டும்
உவப்பதன் மர்மம் என்ன?

உன்னை.....
உருவாக்கிய உள்ளங்களை
உடைத்து நொறுக்குவதும் எதற்காக?

ஆதிகார ஆணவம்
ஓர் போதை என்பதைப்
புலப்படுத்தவா?

உன் பயணத்தில்
பாதங்களாய் இருந்தவர்களை
வெற்றியின் பின்
அலட்சியம் செய்வது எதற்காக?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தர்ப்ப வாதத்தின் சான்றுகள்

நேற்றுவரை
அதிகாரத்தின் அநாதரவாளனாக
இருந்த என்னைப்
பொருட்படுத்தாதவர்கள்.....
இன்று....
பூமாலைகளுடன் வந்திருப்பது
எனக்குச் சூடவா?
இல்லை....
என் பதவிக்குப் போடவா?

அதிகாரம்
அகன்று விடும் போது
அகன்று விடக் கூடிய இவர்களை
இன்று.... நான்
ஆதரிக்கவா? அடித்து விரட்டவா?

சந்தர்ப்பவாதத்தின்
சான்றுகள் அல்லவா
இவர்கள்

வசந்தத்தை அனுபவிக்க
வந்திருக்கும் இவர்கள்
வறட்சியில்....
இங்கிருக்கப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை மாந்திரீகம்

உங்களின்உன்னத தன்மைகளால்
உயரிய சேவைகளால்
மக்கள் மனதை வெல்லும்
திறன் உங்களுக்கில்லை.

அதனால் தான்.... நீங்கள்
சமூகத்தின் அபிவிருத்தி என்ற
வார்த்தை மாந்திரீகத்தை
மொழிந்து... மொழிந்து
பாமர மக்களை
உங்கள் பக்கம்
வசீகரித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அறியாமை இருளில் இருக்கும்
அம்மக்களுக்கு......
காலவிடியல்கள்... விரைவில்
உங்களைக் காட்டிக் கொடுக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய வார்த்தை வலை

தலைவர்களே!
இதுவரை நான்....
என் இளமைத்துடிப்பின் காரணமாக...
உள்ளத்து உணர்ச்சிகளின்
ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு
தெருத்தெருவாய் உங்கள் சுலோகங்களைத்
தூக்கிச் சென்றும்....
வீர முழக்கங்களைக் கோஷமிட்டும்
வந்திருக்கின்றேன்.

இப்போது... நான்
பகுத்தறிவின் பாசறையில்
பராமரிக்கப்பட்டு வருகின்றேன்.

இருளுக்கும் ஒளிக்கும் இடையிலான
வேற்றுமை பற்றி
இப்போது......
எனக்கு நன்கு புரிகிறது.
உங்கள் வசந்தக்கிற்காக
இதுவரை
நான் வாடியதெல்லாம்
இப்போது....
எனக்கே வேடிக்கையாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களே!
சமூகத்தின் விடுதலை
சமூகத்தின் உயர்ச்சி என்ற
மாய வார்த்தை வலைக்குள்
இன்னும்.... எத்தனை காலங்களுக்குத்தான்
இந்த சமூகத்தின் இளைஞர்களைச்
சிக்க வைத்து
உங்கள் அதிகாரத்தைத் தக்க வைக்கப்
போகிறீர்கள்.

உங்களுக்கு....
ஆதரவு வழங்கி வழங்கி
உங்களை உயர்த்திய எங்களுக்கு
அனுபவம் அதிகமுள்ளது.

அதனால்
இனிமேலும் எங்களை
ஏமாற்ற எத்தனிக்காதீர்கள்
நீங்களே ஏமாறிவிடுவீர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை வேட்கைத் தீ

எம் சமுகத்து இளைஞர்களின்
எழுச்சிகளை அடக்க
முனையாதீர்கள்

ஆண்டாண்டு காலமாய்
எம் தலைமைத்துவங்களால்
அடிமை விலங்கிடப் பட்டிருக்கும்
இளைஞர்களை...........
அடக்க முனையாதீர்கள்

ஏனெனில்.....
அந்த இளைஞர்களின்
விடுதலை வேட்கைத் தீயில்
நீங்கள் பொசுங்கிப் போய்விடுவீர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் வாணிபம்

நேற்றுவரை....
எங்கள் சமூகத்தின்
தனித்துவத் தலைவர்களாய் இருந்து
எம் மானம் காத்தவர்கள்
இன்று....
அரசியல் வாணிபத்தில்
அதிக லாபம் ஈட்டுவதற்காய்
ஒட்டு மொத்தமாய்
சமூகத்தை விற்றுவிட்டார்களே!

## எப்போதும் செழுமை

எம் தலைவர்களின்
வாழ்க்கைத் தோப்பு எப்போதும்....
செழுமையாகவே இருக்கிறது.

தம் சமூகத்தவர்கள் நலனை
தம் செழுமைக்கு உரமாய்
அவர்கள்.....
உபயோகித்துக் கொண்டிருப்பதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிமை விலங்கு

தலைவர்களே!
உங்கள்...
வழிநடாத்துதலில்......
விடுதலையைத் தரிசிக்கக்
கனாக்கண்ட எங்கள்
கரங்கள் ஏற்றிருப்பது
இன்று...
அடிமை விலங்குகளைத்தான்.

## ஏளனம் செய்யாதீர்கள்

தலைவர்களே!
இனிமேல் நீங்கள்
எந்தக் கட்சியையும்
எந்தக் கொள்கையையும் ஏளனம்
செய்யாதீர்கள் எங்களிடம்
இழிவாகவும் பேசாதீர்கள்.

ஏனெனில்
நாளை ஓர் நாள்
நீங்களும் அந்தக் கட்சியில்
அந்தக் கொள்கையில்
இணைந்து விடக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருந்திக் கொண்டிருக்கின்றேன்

சமூகத்திற்கு
தகுந்த தலைமை
வாய்க்க வேண்டும் என்று
நான்......வருந்திக் கொண்டிருக்கின்றேன்.

அவர்களோ!
தலைமையை நான்
அலங்கரித்து விடுவேன் என்பதற்காக....
அது எனக்குக்
கிடைத்துவிடக் கூடாது எனப்
பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள்

சிறந்த தலைமைகளால்
சமூகம்....
உயர்வடைய வேண்டும் என உள்ளத்தால்.....
நான் உவந்து கொண்டிருக்கின்றேன்

நான்
உயர்வடைந்து விடுவேன்
என்பதற்காக.......
என் சிந்தனைகளை
அவர்கள்
சிதறடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் அடையாளச் சின்னம்

நாங்கள்
அவலத்தின்
அடையாள சின்னங்கள்

தகுதியிலாத் தலைமைகளால்
தாலாட்டப்படுபவர்கள்

கோழைகள் கூடஎங்களைக்
குட்டிச்சுவராக்கிக்
கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் வாழ்வுத்தோப்பில்
வசந்த மழை என்றுமே....
பொழிந்ததில்லை

கண்ணீர் ஊற்றுக்கள் தான்
காலமெல்லாம்
எங்களில் பெருக்கெடுத்துக்
கொண்டிருக்கிறது.

தொடர்ந்தேர்ச்சியாய்
வேதனைச் சுமைகளைச் சுமந்து
கொண்டிருக்கும் நாங்கள்.........
இன்பத்தால் ஆசீர்வதிக்கப்படுவது
எப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரித்தற்ற உயர்ச்சிகள்

அபிவிருத்திகள்
எங்களுக்குத்
தொலைதூரமாகி விட்டன

உயர்ச்சிகளும்
எங்களுக்கு உரித்தற்றுவிட்டன.

தகுந்த தலைமை இல்லையென்ற
காரணத்திற்காய்
எங்கள்வரலாற்றுப்
பக்கங்கள் யாவும் அவலத்தின்
அடையாளமாய் இருந்து
கொண்டிருக்கிறது.

எழுச்சி பெற வேண்டியஎம்
இனத்தின்ஏற்றத்திற்கான.....
ஏற்ற சிந்தனைகள் எல்லாமும்
எள்ளி நகையாடப்
பட்டுக் கொண்டிருக்கின்றன.

முன்பெல்லாம்
சமூகம் முன்னேறும் என்ற
உன்னத கனவுகள்
உறுதியான நம்பிக்கைகள்
ஆனால் இன்று....
எம்மிடம்
எந்த எதிர்ப்பார்ப்புகளும் கிடையாது.

தலைமைகள்
தகுந்ததாய் அமையாதவரை
துன்பங்களும் அவலங்களும்
அச்சமூகத்தால்....
ஆரவணைக்கப்பட வேண்டியவைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் அறுவடை

அபிவிருத்தியின் அடைக்கலத்தில்
வாழ்வதற்காய்த்
தவமிருக்கும் மக்களே!

அபிவிருத்தியின் சிகரத்தில்
உங்களை....ஏற்றிவிடக் கூடிய
ஏணித் தலைமையை நீங்கள்
தேர்ந்தெடுப்பது எப்போது?

தொடர்ந்தேர்ச்சியாய் வேதனைக்கு
வழிகாட்டும்
தகுதியிலாத் தலைமையின்
விளைநிலமாய் நீங்கள் இருந்து கொண்டிருப்பதால்

உங்கள்
அறுவடைஅவலமாய்
இருப்பதில்ஆச்சரியம் இல்லையே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவி மக்கள்

தங்கள் ஏற்றத்திற்காகப் பதவிக்கு
வரும்தலைவர்கள் எல்லாம்
எங்கள் ஏற்றத்திற்காக வந்ததாகத்தான்
விளம்பிக் கொண்டிருக்கின்றனர்.

எதுவும் அறியாத எம்
அப்பாவி மக்களும் இவர்களை நம்பி
தமது கரங்களாலேயேதம்
கண்களைக் குத்திக்
கொண்டிருக்கின்றனர்.

அதனால்... அவர்கள்தம்
வாழ்வில் உயர்ச்சியைப் பார்க்க
முடியாதவர்களாய் ஆகிவிட்டனர்.

## தகுதியில்லா தலைமைப் போதை

எங்கள்.....
சமூக அங்கம்
இனி என்றும் தளர்ச்சியடைந்தே
காணப்படும்.

அது....தகுதியில்லாத்
தலைமைப் போதையை
அதிகம் அருந்தி விட்டது.
அதனால்.......தளர்ச்சி என்பது
அதற்குத்...தவிர்க்க
முடியாததாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகம் கண்ட கனவுகள்

அபிவிருத்தியின் அடைக்கலத்தில்
தன்னை அலங்கரிக்கச்
சமூகம் கண்ட கனவுகள்
அப்படியே அழிந்து போயின
தன் தலைமைதகுந்ததாய்
அமையாததால்......

தன்னை உயர்த்த
எத்தனிக்கும் அச்சமூகம்
அத் தலைமையை
அழித்தொழிக்க
ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

## புரட்சியின் புதிய முகவரி

என் சமூகத்தவர்களே!
நீங்கள்....பொறுமையாய்
இருக்கும் வரை எம் தலைவர்கள்
உங்களை அப்பாவிகள் எதுவும்
புரியாதவர்கள் என்றே எண்ணட்டும்

நீங்கள் கிளர்ந்தெழுந்த பின்பு
அவர்கள் அறிந்து கொள்ளட்டும்
புரட்சியின் புதிய முகவரி
நீங்கள் தான் என்பதை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராஜகத்தின் வாரிசுகள்

புளியந்தோப்பில் கரும்பின்
இனிப்பை
ருசிக்கக் காத்திருப்பவர்களே!

கழுகுக் குஞ்சுக்காகக்
கோழி முட்டையை அடை
வைப்பவர்களே!

தோழமைக்காகப் பாம்புக்
குட்டியை பஞ்சணையில்
வளர்ப்பவர்களே!

புரிந்து கொள்ளுங்கள் 'டார்வின்'
தத்துவத்தை ஓவ்வொர் எச்சமும்
தம் மூதாதையரைப்
பிரதிபலிக்கும் என்பதை

இரவின் விலாசம்
இருள் தானே!
ஆதிகார ஆடைகளால்
தங்களை மறைத்திருக்கும்
இந்த அராஜகத்தின் வாரிசுகளுக்கா
இன்னும் வாழ்த்துப் பாடப் போகிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தின் தீராத புற்றுநோய்

இந்தச் சமூகத்தின்
மடமைத் தனத்தை
என் மனதுக்குள்
எண்ணிப் பார்க்கிறேன்

இங்கே தலைவர்
தெரிவென்பது அர்த்தமற்ற
செயலாகவே
அர்த்தம் பெற்றுவிட்டது.

இது இச்சமூகத்தினதீராத
புற்றுநோய்.......

தலைமைத்துவத்தை
அலங்கரிக்க தகுதியானோர் இருக்க
தலைமைத்துவத்தால் அலங்கரிக்கப்பட
ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் அவலமே....
இங்கு அரங்கேறிக்
கொண்டிருக்கிறது.

இந்நிலை இருக்கும் வரைக்கும்
இச் சமூகம் கீழ்மைச்
சிறையிலிருந்து விடுதலை
பெறவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கில்

நிர்வாண அரசியல் அரங்கில்
இலட்சிய ஆடை அணிந்த
அரசியல் வாதிகள்
அசிங்கமானவர்களாகவே
நோக்கப்பட்டு
தொடர்ந்தோச்சியான தோல்விகளால்
ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

## சமூகமே

சமூகமே!
உன்..... உயர்வுக்காய்
உன்னை நாடிவரும்
உள்ளங்களை எல்லாம்
நீ விரட்டும் போது
விலகிச் செல்வது
அவர்கள் மட்டுமல்ல
உன் உயர்வும்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பயணம்

ஊன்று கோல்களாய்
உதவும் என்று நான்
ஏந்திய தடிகளே
என்னை
இடறி விழச் செய்யும் போது
என் பயணம் எப்படி முற்றுப்பெறும்.

## செருப்பின் அடிகள்

சமூகத்தின் உயர்வுக்காய்
நெருப்பில் நடந்தவர்களுக்கு
செருப்பின் அடிகள்
பிரதியுபகாரமாய் ஆகிய போது
இந்தச் சமூகத்தில்.........
வேசம் போட்டோர்களுக்கு
மட்டும்தான்
பொறுப்பான பதவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

இது
மனித நந்தவனத்தின்
நன்னீர் ஊற்று.

மானிட இனம்
உன்னதத்தின் உச்சியில்
கால்பதிக்க உதவும்
உயரிய படிக்கட்டு.

மனிதத்தின் உயர்வை
எடை பொட்டுக் காட்டும்
தராசு.

## கல்விச் சுடர்

அறியாமை இருளில்
கல்விச் சுடருக்காய்க்
காத்துக் கிடந்த
ஈழத்து முஸ்லிம் சமூகம்
பதியுத்தீன் மஃமூத்தின்
கல்வியமைச்சின் தழுவலில்த்தான்
அதனை...
அடைந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவ காருண்யம்

ஜீவ காருண்யம்
பற்றிப் பிரஸ்த்தாபிப்பவர்களே!

உங்கள் பணி
இன்னும்.....
எத்தனை காலங்களுக்குத்தான்
தொடரப் போகிறது?....

இங்கே பாருங்கள்
பேகன்களே.... மயிலின்
இறக்கைகளை ஒடித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

சிபி மன்னர்கள்
புறாவின் மாமிசத்தைப்
புசித்து கொண்டிருக்கிறார்கள்.

## தேசப் பற்று

எம் உளப் பொய்கையில்
தேசப் பற்றுப் பூக்கள்
நன்கு
பூத்துக் குழுங்கட்டும்

எங்கள்
மூச்சுக்களின் முகவரியாகவும்
நாட்டுப்பற்றே இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையான எங்கள் நாடு
மனிதத்தின் மாண்புகளால்
அலங்கரிக்கப்படட்டும்.

பிறந்த நாட்டை நேசிப்பது
புனிதக் கடமையாய்ப்
பூசிக்கப்படட்டும்.

மனிதர்களின் உயர்வு
அவர்கள் நாட்டுக்காற்றும்
சேவைகளைக் கொண்டு
கணிக்கப்படட்டும்

## காலத்தின் நியதியா?

உன்னை உயர்த்தியோரைத்
தாழ்த்தி வைத்திருக்கும்
சமூகமே!

உனக்கு
ஒளியேற்றியோரைக்
கரிக்கட்டைகளாய்க்
காட்சி கொள்ளச் செய்திருக்கும்
சமூகமே!

உன் செழுமைக்கு
வான் மழையாய்
வாழ்ந்தவர்களையெல்லாம்
வறட்சியின் வடிவங்களாக்கிய
சமூகமே!

உன் அறியாமையை
அகற்றியோரையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடயர்களாய் மதிக்கும்
சமூகமே!

உன் விடுதலைக்கு
வித்திட்டவர்களுக்கெல்லாம்
அடிமை விலங்கை அணிவித்திருக்கும்
சமூகமே!

உண்மைக்கும் பொய்மைக்கும்
நீதிக்கும் அநீதிக்கும்
சுடருக்கும் இருளுக்கும் வேறுபாட்டை
விளங்கிக் கொள்ளாமல்
இருக்கும்.... நீ
அழிவை அரவணைப்பது
காலத்தின் நியதியா

## பரிதாபத்தின் பாசறை

நீண்ட காரிருளில்
மனித வாழ்வு
நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஞானச் சுடரை ஏந்தியவன்
பாதகப் பாம்புகளிலிருந்து
பாதுகாப்பாகத்
தன் பயணத்தைத்
தொடர்ந்து கொண்டிருக்கின்றான்.

எங்கே செல்வதென்றே புரியாமல்
பயணித்துக் கொண்டிருப்பவர்களின்
பயணம் முடிவடைவது
பரிதாபத்தின் பாசறையில்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள்

மனிதத்தின்
அறியாமைச் சுமையை
அகற்ற உதவும் நெம்புகோல்.

வாழ்க்கைக் காரிருளில்
மானுடத்திற்கு
வழிகாட்டும் ஒளிச்சுடர்.

மனிதக் களனியின் செழுமைக்கு
அறிவு மழை பொழியும்
கார்மேகம்.

அறிவுப் பசியைப் போக்கும்
அட்சய பாத்திரம்.

உலகை
ஞான வலம்வர
உதவும் ஊன்றுகோல்.

இது
அறிஞர்களின்
அனுபவக் களஞ்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலையின் விலாசம்

விடுதலையின் விலாசம்
பல வழிகளிலும்
இங்கு
விளம்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதோ வானவீதியில்
வண்ணப் பறவையின் வலம்
விடுதலையின்
வடிவம் அல்லவா!

கனிச் சோலையில்
குயில் கூட்டங்களின் இன்னிசை
சுதந்திரத்தின் கீதமல்லவா!

கான மயிலின் நடனம்
விடுதலையின் கூத்தல்லவா!

மனிதன் மட்டும்
ஏன்
அடிமைத்தனத்திற்குள்
ஆட்கொள்ளப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வுத் திட்டங்கள்

போர் நிறுத்தங்களும்
சமாதான ஒப்பந்தங்களும்
இங்கு...
மனிதப்படுகொலைகளை
அதிகரிக்கச் செய்வதனால்
தீர்வுத்திட்டங்கள் எதற்காக?

## மறைந்துள்ள சுயநலம்

சமூகத்தின் பெயரால் வரும்
அரசியலை
அப்படியே
மார்க்கம் என நம்பிவிடாதே!

சுமூகத்தின் பெயருக்குப்பின்னே
பெரும் சுயநலம்
மறைந்துள்ளதையும்
மறந்துவிடாதே

இங்கு
சமூகம் இனம் விடுதலை
எழுச்சி போராட்டம் போன்ற
வார்த்தைகள் யாவும்
பாமர மக்களை மயக்கும்
அபின்கள் என்பதையும் அறிந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத் தடாகம்

உன் உள்ளத் தடாகம்
உறுதிப் பூக்களால்
அலங்கரிக்கப்படும் போது தான்
வாழ்க்கைப் பாதையில்
உன்னால்....
வெற்றி வாசனையை நுகரமுடியும்

## தலைவர்களின் ஆசைக் கனவுகள்

இந்தச் சமூகத்தில்
எம் தலைவர்களின்
ஆசைக் கனவுகள் மட்டும்
இனிதே நிறைவேறிக் கொண்டிருக்கின்றன
எங்கள் இளைஞர்களின்
தியாகங்கள் யாவும்
உதாசீனம் செய்யப்பட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம்

தன் தலைமையை
சமூகத்தின் நலனுக்கு
வேலியாய் ஆக்காமல்
தன் உயர்வுக்கு
ஏணியாய் எடுப்பவன்
சரித்திரத்தில்
சரிந்து போனதுதான்.... சரித்திரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது இங்கு

இப்போது.... இங்கு
எதுவுமே செய்யாதவனுக்குச்
சேவைக்கான.... பொன்னாடை

கவிதை வரிகள்
தெரியாதவனுக்கு
புலவனுக்கான பொற்கிழிகள்

வார்த்தைகளை
வருசிக்கத் தெரியாதவனுக்கு
நாவலன் எனும் புகழாரம்

சமூகத்தில்
நல்லோர்களுக்கு
நோவினைகள்

குழப்பதாரிகளுக்கு
சமாதான நேசவிருதுகள்

ஊரெல்லாம் ஒன்றுகூடி
ஊர்க் குருவிக்கு
இராசாளிக்கான மெச்சுதல்கள்

மாணிக்கத்தை மதிக்காது
மண்ணாங் கட்டியை
வாழ்த்திக் கொண்டிருக்கிறது
இந்தச் சமூகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foundation.
nam.org



இக்கவிதைத் தொகுப்பை எழுதிய சகோதரர்
எம் எம் ஏ அனஸ் ஓர் இலக்கியப் பாரம்மரியத்தில் வந்தவர்.
சீராப்புராணத்தின் பல படலங்களுக்கு தெளிவுரை எழுதிய
மூதூர் உமர் நெய்னார் புலவரின் மகள் வழிப் புத்திரர்.
அவரின் இலக்கியப் பார்வையும் சொற்களை இலாவகமாக
கையாளும் திறனும் இவரிடம் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.
கவிதா உணர்வு இவரது பாரம்பரியம். கண்ணியமும் சமுக பற்றும்
தந்தை வழி வந்தது. இத்தனைக்கும் மேலாக அரசியலில் நன்னோக்குள்ள
முனைப்பு.இத்தனை குணாதிசயங்களையும் வெளிப்படுத்தி
நிற்கும் கருத்தியல்வாதத்தை இந்தக் கவிதைகளில் தரிசிக்க
கிடைத்தது.
கவிஞர் மு. மேத்தாவின் 'கண்ணீர் பூ'
மாதிரி இந்தக் கவிதைத் தொகுதியில் உள்ள
ஆக்கங்களும் கவிஞர்களின் நெஞ்சைத் தொட்டு
நிற்கும் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை.

எம்.எஸ்.அமானுல்லா (ஆசிரியர்)
தலைவர் - மூதூர் இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org